சொன்னான். நீங்கள் வந்திருப்பதிலிருந்து மணிஇரண்டுக்கு மேலிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று காரசாரமாகப் பதில் அளித்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நீ இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லையே! பாவம், பட்டினியாயிருக்கிறாயே!'' என்று அவன் சேட்பதற்குள் கோபம் தாங்காத தேவகி, ''என் பட்டினியை விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் சாப்பிட்டாச்சா, இல்லையா? இல்லா விட்டால், சீக்கிரம் கதவைத் திறந்து விடுங்கள். சமைக்க வாவது ஆரம்பிக்கிறேன்'' என்றாள் குரோதமாக.

''என் ஞாபக மறதியை என்ன சொல்லுவேன் போ! கலெக்டர் வீட்டில் கல்யாணம் முடிந்து இலை போடுகிற சமயத்திலேதான் நீ இன்றைக்கு இங்கே ஊருக்கு வருகிறேன் என்று போட்டிருந்த கடிதம் ஞாபகம் வந்தது. அவ்வளவுதான்! 'சே! என்ன முட்டாள்தனம்! பாவம் தேவகி என்ன செய்கிறாளோ' என்று கவலையோடு காரில் ஏறிக்கொண்டு பத்து மைலையும் பத்துகஜமாக நினைத்துக் கொண்டு பறந்து வந்தேன். வந்து பார்த்தால் அம்மா அவர்கள் நிச்சந்தையாத் தூங்குகிறாள். 'தூங்கட்டும், பாவம்' என்று அப்படியே உட்கார்ந்திருந்தேன். வேலைக்காரன் ஹோட்டலிலிருந்து வாங்கிக்கொண்டு வந்து வைத்திருக்கும் சாப்பாடு டிபன் ஸெட்டிலே ஆறிப் போகிறது. எழுந்திரு ரெண்டு பேரும் சாப்பிடுவோம்!'' என்று நாகராஜன் கனிவுடன் அவள் கரத்தைப் பிடித்து அழைத்தான்.

தேவகியின் கோபமெல்லாம் ஒரே நிமிடத்தில் மறைந்து விட்டது. அதற்குப் பதில், அவள் மனத்தில் இரக்கம் நிறைந்தது. நாகராஜனும் அவளுக்காகப் பட்டினியாகக் காத்திருக்கிறான்! அவள் நினைத்ததுபோல் அசிரத்தையான கணவனா அவன்? சில சமயங்களில் பராமுகமாக இருப்பவனா யிருந்தாலும் அந்த நிமிடம் அவன் அன்பு மயமாகத்தானே தென்பட்டான்! நாகராஜனின் வாயிலிருந்து அன்புச் சொற்கள் வெளிப்படவும் தேவகியின்



வாழ்விலே அபூர்வமான ஒரு சந்தர்ப்பம் நிகழ்ந்தது. அந்த ஒரு நிமிஷத்தை அவனுடன் சண்டையிட்டு ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?' இவ்வாறு எண்ணிய தேவகி தன் கணவனை மனத்திற்குள் அவன் பிசகிற்காக மன்னித்து விட்டாள்.

''ஒரு மாதமா கடிதமே போடாமல் இருந்தாயே, உன் மனசு என்ன மனசு! கல்லுதான் போ, தேவகி! தினம் கடிதம் வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனேன். இப்போது உன்னை நான் ஏன் கோபித்துக்கொள்ளாதிருக்கிறேன், தெரியுமா? இனிமேல் பிறந்தகத்தில் போய் மாசக் கணக்காகக் 'காம்ப்'போட உன்னை அநுமதிக்கமாட்டேன், பார்த்துக்கொள்'' என்று கொஞ்சலாக மொழிந்த நாகராஜன் ''தேவகி, அம்மா நாளைக்கு வந்தாலும் வருவாள். 'நாட்டுப்பெண் நாலுமாசம் ஸ்நானம் பண்ணா இருக்கிறாள்; நீ வந்தால் தற்சமயம் உதவியாயிருக்கும்' என்று ஒரு கடிதம் அம்மாவுக்குப் போட்டிருக்கிறேன். நான் செய்தது சரிதானே?'' என்று கொஞ்சலாக அவளது கன்னத்தை வருடினான் நாகராஜன்.

## எல்லைக் காளியின் கோபம்

பொழுது சாயக் கொஞ்ச நேரமேதான் இருந்தது. அபிராமி தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு அவசர மாக வீட்டை விட்டுப் புறப்பட்டாள். ''இருட்டறத்துக்கு முந்தி ஊட்டுக்குத் திரும்பிடு'' என அவள் புறப்படுமுன்பே அவள் தாய் அவளை எச்சரித்தாள். ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருந்த எல்லைக் காளிக் கோவிலைக்கண்டாலே அந்தக் கிராமத்து ஜனங்கள் எல்லோருக்கும் ஒருவித பீதிதான். அதுவும் அந்தி மயங்கும் சமயம் யாரும் ஆற்றங் கரைப்பக்கம் போகத் துணியமாட்டார்கள். ஏனெனில் அந்த வேளையில் தினமும், ஒரு முகூர்த்த காலம்

காளிதேவி பேயாக மாறி அந்தப் பக்கம் திரிந்துகொண் டிருப்பதாகச் சொல்லுவார்கள்!

காளி தேவி பேயாக அலைந்தால் என்ன, பிசாசாக ஆர்ப்பரித்தால் என்ன என்றதொரு திடச்சித்தத்துடன் அபிராமி அந்தி நேரத்தில்தான் சுந்தரமூர்த்தியைக் காளி கோயிலின் பன்னீர் மரத்தடியிலே தினமும் சந்திப்பது வழக்கம். காதல் பொங்கிய உள்ளத்துடன், ஒருவரை ஒருவர் ஏங்கி எதிர்பார்க்கும் அவ்விருவரது உள்ளத்திலேயும் சிறிதும் காளிதேவியைப் பற்றிய பயமே ஏற்பட்டதில்லை. தங்களைத் தவிர வேறு எதைப்பற்றியும் ஞாபகமே ஏற்படாதிருந்ததில் வியப்பேயில்லை.

அபிராமி அன்று ஆற்றங்கரையை அடைந்தபொழுது வழக்கம் போல் ஆற்றங்கரை சந்தடியற்று இருக்கவில்லை. தண்ணீர் எடுக்க வந்த பெண்கள், இருட்டும் நேரத்தைக் கூட லட்சியம் செய்யாது பேசிக்கொண்டு சாவதானமாகக் குடத்தைத் தேய்த்துக்கொண்டிருந்தனர்.

அபிராமியும் தன் குடத்தைப் பளபளவென்று மின்னும்படி மெதுவாகத் தேய்த்துக்கொண்டிருந்தாள். எத்தனை நேரந்தான் குடத்தை விளக்கிக்கொண்டு இருக்க முடியும்? பேச்சு சுவாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்த அந்தப் பெண்கள் அன்றைய முழுவதும் ஆற்றங்கரையை விட்டு அசைய மாட்டார்கள் போல் தோன்றவே, சலிப்படைந்த அபிராமி குடத்தில் தண்ணீரை முகந்துகொண்டு ஆற்றை விட்டுக் கிளம்பத் திரும்பினாள். சற்றுத் தொலைவில் வரும் சைக்கிளைக் கண்டதும் அவளது நெஞ்சு வேகம் கொண்டது. முன் மண்டபத்து ஓரமாகச் சைக்கிளை நிறுத்திவிட்டு அந்தப் புருஷன் உள்ளே நுழைவதைக் கவனித்த அபிராமி, பதைபதைக்கும் நெஞ்சத்துடன் காளி கோயிலை நோக்கி நடந்தாள். எத்தனைதான் பேச்சு சுவாரசியத்தில் ஈடுபட்டிருந்தாலும், அந்தப் பெண்களின்



அந்தி அபிராமி காளிகோயிலுக்குள் அவசரமாக நுழைந்ததையும், அவளுக்கு முன்பு சென்ற புருஷனையும் கவனித்துவிட்டாள்.

சுந்தரமூர்த்திக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு அபிராமி காளி கோவிலினின்று வெளியே வந்தபொழுது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. தாய் கோபிப்பாளே என்று வேகமாக வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். வழியில் ''அபிராமி! நில்லு!'' என்ற குரலைக் கேட்ட அவள் அப்படியே பயந்து போய் நின்றாள். குலை நடுங்கப் பதைபதைத்து, திரும்பிப் பார்த்த அபிராமிக்குப் போன உயிர் திரும்பி வந்ததுபோல்தான் இருந்தது. அவளைப் பெயர் சொல்லி அழைத்தது யாரும் அல்ல. அவளுடைய தோழி பகவதிதான்.

''எல்லைக் காளியின் பிசாசுதான் கூப்பிடுகிறதுன்னு திகைச்சுப் பயந்துட்டாயல்லவா?'' என்று பகவதி கேட்டு வாய்விட்டுச் சிரித்தாள்.

''கொஞ்சம் பயந்துதான் போனேன்'' என உண்மையை ஒப்புக்கொண்டாள் அபிராமி.

பகவதி திடீரென்று தனது குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''ஆமாம், அபிராமி! நீ காளிகோவிலுக்குள்ளே நுழைஞ்சதை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். சுந்தரமூர்த்தியும் அங்கே போனதைப் பார்த்தேன். எனக்கு விஷயம் பூராவும் தெரியும். ஆனால், தண்ணி எடுக்க வந்த அந்த பொண்ணுகள்தான் முனியாண்டி மகள் வாழா வெட்டியாக இருக்கிறது போதாதுன்னு நடவடிக்கையிலும் பிசாசமாயிட்டா போலிருக்குன்னு பேசிக்கிட்டாங்க. எனக்கு அதைக் கேக்கக் கேக்க, ரொம்ப மனசு சங்கடப் பட்டுது'' என்று முடித்தாள்.

அபிராமி பதிலே பேசவில்லை. அவள் கண்களி லிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கி வழிந்தது. ''பகவதி! உங்கிட்ட சொல்லாம நான் யாருகிட்ட மனசை

விட்டுச் சொல்லப்போகிறேன்? கட்டின புருஷனைப் பார்த்துப் பேசக்கூட எனக்கு வழியில்லாம விதி சதி பண்ணிடுச்சே. எல்லாரையும் போல நான் சுகமா வாழ்ந்து கிட்டிருந்தாக்க இப்படி இருட்டற வேளையிலே திருட்டுத் தனமா யாரும் பார்க்கப் போறாங்களேன்னு பயந்து கிட்டு பேசிக்கிட்டு நிப்பேனா?'' என்று விம்மலுடன் கூறினாள்.

''இருந்தாலும், முனியாண்டியும் சாமிக்கண்ணுவும் இப்படி விரோதம் பாராட்ட வேண்டாம். பெரியவங்க விரோதத்திலே, வீணா இரண்டு வீட்டுக் குழந்தைகளும் கண்ணும் கண்ணீருமா நிக்கறது நல்லாவே இல்லை'' என்று அநுதாபப்பட்டாள் பகவதி.

''எனக்கு உசிரோட வாழவே பிடிக்கலை, பகவதி! கலியாணமாகி வருஷம் நாலு ஆகப்போகுது. ஒருநாள் கூட அவருக்கு என் கையாலே சோறு சமைச்சுப் போட்ட தில்லை'' என்று திணறியபடி கூறிவிட்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

''நீ அடிக்கடி ஆற்றங்கரைக்கு இந்த வேளைக்கு வரும் ரகசியம் எனக்குத் தெரியும். இருந்தாலும் நீ இந்த வேளைக்கு வரது ரொம்பத் தப்பு அபிராமி'' என்றாள் பகவதி.

''என்ன இது! சொன்னா கேட்கிறதேயில்லை! பொழுது போவற சமயத்திலே கோயில் பக்கத்திலே எவ்வளவு நேரம் நிப்பியாம் நீ!'' என்று அபிராமியின் தாய் கோபத்துடன் இரைந்த வண்ணம் மகளை வரவேற்றாள்.

''அந்தப் பேயாவது என்னை அடிச்சுத் தின்னுப்புட்டா சரி. என்னாத்துக்கு நான் உசிரோட இருக்கணும்!'' என்று பதிலுக்குக் கத்திய மகளின் அழுது வாடியிருந்த முகத்தைக் கண்ட செல்லி மேலே விவாதிக்கவில்லை.

தன் ஒரே மகளின் வாழ்க்கை வீணாகிவிட்டதைக் குறித்துச் செல்லியின் மனம் புண்ணாகி நொந்து போயிருந்



தது உண்மையே. தன் அருமை மகளை அடுத்த கிராமத்து நாட்டாண்மைக்காரர் சாமிக்கண்ணுவின் மூத்த குமாரன் சுந்தரமூர்த்திக்குக் கட்டிக் கொடுத்த பொழுது செல்லி மிகவும் சந்தோஷப்பட்டாள். நிலம், வீடு, தோட்டம், ஏராளமாக என்று நாலாபக்கத்திலும் பணப் பெருக்கம் கொண்ட நாட்டாண்மைக்காரர் சம்பந்தம் தங்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமாகத்தான் அவளுக்குத் தோன்றியது.

கல்யாணமாகிய சில தினங்களில் ஒரு சிறு சம்பவம் நடந்தது. முனியாண்டியின் மனம் ஊருக்கு வடக்கே இருந்த மாந்தோப்பின்மீது விழுந்தது. அதை விலைக்கு வாங்க அதே சமயம் சம்பந்தி சாமிக்கண்ணுவும் ஆசைப் பட்டு, வேண்டுமென்றே விலையை அதிகம் கொடுத்து வாங்கிவிட்டான். நடுவில் சில விஷமிகள் இருபுறமும் கோள் சொல்லவே, கோபமடைந்த முனியாண்டி தன் பெண்ணைப் புருஷன் வீட்டிற்கு அனுப்ப மறுத்தான். இந்தப் பெண் இல்லாவிடில் ஊரில் பெண்ணுக்கா பஞ்சம் என்று வெகுண்ட சாமிக்கண்ணு தன் மருமகளைப் புக்ககம் அழைக்காமலே இருந்துவிட்டான்.

பெற்றோர்களின் கோபத்திற்கு இலக்கான இளந் தம் பதிகள் இருவரும் ஏறக்குறைய ஒரு வருஷகாலம் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே கழித்து விட்டனர். தண்ணீர் எடுக்க ஆற்றுக்குச் சென்ற அபிராமி ஒருநாள் தற்செய லாகத் தன் கணவனைக் காளி கோயிலருகில் சந்தித்தாள். அன்றையிலிருந்து மாதத்திற்கு இருமுறை அல்லது, ஒரு முறையாவது இருவரும் கோவிலில் சந்தித்து தங்கள் மனத் துயரைப் பகிர்ந்து கொள்வார்கள். தகப்பன் எத்தனைதான் நிர்ப்பந்தித்தாலும் தான் வேறு கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றும், எந்தக் காரணத்திற்கும் அவளைத் தான் கைவிடப்போவதில்லை என்றும் சுந்தர மூர்த்தி ஒவ்வொரு சந்திப்பிலும் அவளுக்கு உறுதிமொழிகள்

கூறிக் கொண்டேதான் இருந்தான். எனினும், அபிராமி யின் துயரம் என்னவோ குறையவில்லை.

தன் தனிமையான வாழ்க்கையை நினைத்து அபிராமி மனம் வேதனைப்படுகிறாள் என்பதைச் செல்லி நன்கு அறிவாள். என்றாலும் அவளால் மகளுக்கு உதவி செய்ய முடியவில்லை. மருமகனைப்பற்றி வாயைத் திறந் தால் போதும்; கோபத்துடன் கத்திக்கொண்டு முனியாண்டி அவளை அடிக்க வந்துவிடுவான்! முனியாண்டி மிகவும் பொல்லாதவன் என்பது ஊரிலே மிகவும் பிரசித்தம்.

மேற்கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு நாட்கள் சென்றன. அன்று சாயங்காலம் வழக்கபோல் தண்ணீர் எடுக்க ஆற்றுக்குக் கிளம்பிய அபிராமி வீட்டு வாசலுக்கு வந்ததும் முனியாண்டி, ''அபிராமி!'' என்று அதட்டல் குரலில் கூப்பிட்டான். திகைப்புடன் தந்தையின் பக்கம் திரும்பினாள் அபிராமி.

''நீ இன்னியிலேருந்து ஆத்துக்குத் தண்ணீர் எடுக்கப் போவதை நிறுத்திவிடு. இந்த ஊர் காவாலிப் பசங்க நாலு பேர் நாலு விதமா பேசறாங்க. என் காதிலே இனி இது மாதிரி எதுவும் விழக்கூடாது! ஆமாம்'' என்று கர்ஜித் தான்.

குடத்துடன் உள்ளே சட்டெனத் திரும்பிய அபிராமி உயிர் அற்றவள்போல் முற்றத்துத் தரைமீது உட்கார்ந்து விட்டாள். வெளியே எங்கும் போகக்கூடாது என்று அவள் தகப்பன் விதித்த தண்டனையினால், அடுத்த தடவை சுந்தரமூர்த்தியை அவள் எப்படிக் கோயிலில் சந்திக்க முடியும்?

மேலும் சில தினங்கள் சென்றன. தனது சங்கடமான நிலைமையை ரகசியமாக அபிராமி பகவதியிடம் வெளி யிட்டாள். அதைக் கேட்ட பகவதிக்கு ஒரு யோசனை



தோன்றியது. ''நீ உன் கணவனுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களை அவ்வப்பொழுது என்னிடம் சொல்லிவிடு. நான் அதை என் சின்னத் தம்பியிடம் சுந்தரமூர்த்திக்குச் சொல்லி அனுப்புகிறேன். அவர் ஏதேனும் சொல்ல இருந் தாலும் அந்த விஷயத்தை என் தம்பி கேட்டறிந்து வந்து என்னிடம் சொல்லுவான். நான் பிறகு அதை உனக்குச் சொல்கிறேன்'' என்றாள்.

இந்த யோசனைக்குஅபிராமிஒப்புக்கொண்டாள். அன்று முதல் சுந்தரமூர்த்தியைச் சந்திக்கச் செல்லும் ஆவலைவிட பகவதியின் வரவிற்கு இரு மடங்கு ஆவலுடன் அவள் காத்திருந்தாள். இவ்வாறு சில நாட்கள் ஓடிவிட்டன.

ஒருநாள் உச்சி வெயிலின்பொழுது பகவதி அபூர்வ மாகச் சில நாட்கள் வராமலிருந்து திடீரென அபிராமியின் வீட்டிற்கு வந்தாள். முனியாண்டி வேலை விஷயமாக வெளியே போயிருந்தான். பின்கட்டு அறையிலே செல்லி தூங்கிக்கொண்டிருந்தாள். தாழ்வாரத்திலே தூணின்மீது சாய்ந்துகொண்டிருந்த அபிராமிக்கு, சிநேகிதியைக் கண்ட தும் ஆனந்தம் தாங்க முடியவில்லை. கணவனைக் கண்டது போல ஆனந்தத்துடன் அவளை வரவேற்று, உட்காரச் சொன்னாள். சுந்தரமூர்த்தி வேலையாக வெளியூருக்குப் போயிருக்கிறான் என்றும், வரப் பத்து தினங்கள் பிடிக்கும் என்பதும்தான் பகவதி கொண்டு வந்த செய்தி.

அதற்குப்பின் ஊர்ச்சங்கதிகள் பலவற்றையும் பேசிச் சிரித்துக்கொண்டிருந்த பகவதி பேச்சைச் சட்டென நிறுத்தி விட்டு, கண்களை அகல விரித்து அபிராமியை முறைத்துப் பார்த்தாள். சிநேகிதியின் விபரீதமான நடத்தையின் அர்த்தத்தை அறியாத அபிராமி ஒன்றும் விளங்காமல் அவளையே பார்த்துக்கொண்டு அசைவற்று உட்கார்ந்து விட்டாள்.

பகவதி ஆங்காரத்துடன் தலையைக் குலுக்கினாள். பின்னால் அழகாகக் கட்டி முடிச்சிட்டிருந்த அவளது கூந்தல் அவிழ்ந்து தொங்கியது. கண்கள் சிவந்து பயங்கர மான உருவத்தை அடைந்தன. ''ஆஹா! என்னைத் தெரியலையா?'' என்று உரத்த குரலில் கேட்ட பகவதி கடகடவென்று பயங்கரமாகச் சிரித்தாள்.

''ஐயோ அம்மா!'' என்று அபிராமி போட்ட கூச்சலைக் கேட்டு, தூங்கிக்கொண்டிருந்த செல்லி விழித்துக் கொண்டு தாழ்வாரத்திற்கு வந்தாள்.

''எல்லைக் காளியைத் தெரியாதவ இந்த ஊரிலே இருக்கிறாளாடி!'' என்று பல்லைக் கடித்தாள் பகவதி உறுமிக்கொண்டு.

''ஐயோ! பகவதி மேலே சாமி வந்திருக்குதே! காளியம்மா! நீயா வந்திருக்கிறே! உனக்கு என்ன குறை யம்மா?'' என்று பயபக்தியுடன் வினவிய செல்லி கையைக் குவித்துக் கும்பிட்டுக்கொண்டு நின்றாள்.

பகவதிமீது எழுந்தருளியிருந்த எல்லைக்காளி அபிராமி யின் பக்கம் பார்த்துப் பேசத் தொடங்கினாள்:- ''அபிராமி! உனக்கு என் மகிமை தெரியாதாடி! என்னை அவமதிச்ச வங்க ஒத்தரும் உசிரோட இருந்ததில்லை. உன் மாமன் சாமிக்கண்ணு போனமாசம் எனக்கு வழக்கமா கொடுக்க வேண்டிய பூசையைக் கொடுக்க மறந்துவிட்டான். மத்த வங்க எடுத்துச் சொன்னதுக்கு என்னை அவமரியாதையாகப் பேசினான். ஆஹா! ஆஹா! அவனை நான் என்ன பண்ணு வேன், தெரியுமா? இன்னும் நாலு நாளிலே அவன் ரத்தபேதி யிலே செத்துப் போயிடுவான், பார்!'' என்று உக்கிரமாகக் கொக்கரித்துவிட்டுப் பயங்கரமாகச் சிரித்தாள்.

''ஐயோ! அடி என் ஆத்தே! அம்மா தாயே, ஏழைங் களை ரொம்பச் சோதிக்காதே அம்மா!'' என்று விழுந்து நமஸ்கரித்தாள் செல்லி. அபிராமியும் பயத்துடன் தன்



கரங்களைக் குவித்து வணங்கினாள்., அவ்வளவுதான். உட் கார்ந்திருந்த பகவதி மடால் என்று தரைமீது மூர்ச்சை யாகிச் சாய்ந்துவிட்டாள். அபிராமி ஓடிப்போய் ஒரு குவளை பச்சைத் தண்ணீரைக் கொண்டு வந்து முகத்தில் தெளித்த பின்புதான் அவளுடைய மயக்கம் தெளிந்தது.

நாலைந்து நாட்கள் சென்றன. பகவதி கூறியபடியே ஏதோ நோயாக இருந்த சாமிக்கண்ணு திடீரென்று இறந்துவிட்டான். மாமனார் இறந்துபோனதற்கும் அபிராமி போக முடியவில்லை. சம்பந்தியின் இறுதிச் சடங்கிற்குக்கூட முனியாண்டி போகவில்லை.

ஒரு தினம் சாயங்காலம் பகவதி அபிராமியைப் பார்க்க வந்திருந்தாள். கணவனிடமிருந்து ஒரு விதமான தகவலும் அவள் கொண்டு வராததைக் கண்டு அபிராமியின் மனம் சஞ்சலமடைந்தது. கூடத்தில் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு, பகவதியின் அருகில் வந்து உட்கார்ந்த அபிராமி திடுக்கிட்டுப் போனாள். ஏனெனில், பகவதி அபிராமியை வெறித்துப் பார்க்கத் தொடங்கியிருந் தாள்.

வீட்டிலே தன்னைத் தவிர யாரும் இல்லை என்பதை உணர்ந்த அபிராமியின் உடல் பயத்தில் நடுங்கியது. ''அம்மா காளியம்மா! இந்த ஏழை செய்த பிழை ஏதாச்சு மிருந்தா மன்னிச்சுக்கோ!'' என்று நாத்தடுமாற வேண்டிக் கொண்டாள் வாய்விட்டு.

''அடி அபிராமி! உன் புருஷனை நினைச்சு நீ உருகிக் கொண்டு இருக்கிறாயே, துப்புக்கெட்ட பெண்ணே! அவன் அக்ரமக்காரன், அநியாயம் பிடிச்சவன். அப்பன் செத்து ஒரு மாசங்கூட ஆகவில்லை. வேறு கல்யாணம் செய்து கொள்ளக் கிளம்பிட்டான். இனி மேலே நீ சுந்தர மூர்த்தியை நினைச்சு உருகறத்திலே பிரயோசனமில்லை!''

''ஐயோ! தாயே! இது நிசமா! இப்படியும் உண்டா?'' என்று துக்கத்துடன் வினவிய அபிராமியால் அழுகையை அடக்க முடியவில்லை.

''இந்த எல்லைக் காளியை அவமதிச்சு விட்டான்,
பாவி. அவனை நான் சும்மாவிடப் போவதில்லை'' என்று
பல்லை நறநறவென்று கடித்தாள் பகவதிமேல் வந்திருந்த
காளி.

''ஐயோ காளியாத்தா! அவரு என்னை மறந்தாலும்
மறக்கட்டும். அவரை ஒண்ணும் பண்ணி விடாதே!
அம்மா, உன்னைக் கும்பிடுகிறேன்'' என வேண்டிக்
கொண்டாள்.

''பார்க்கிறேன்! உம்!'' எனப் பெருமூச்சு விட்ட
எல்லைக் காளி மலை ஏறிவிடவே பகவதி மூர்ச்சித்து
விழுந்துவிட்டாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் சில தினங்கள் சென்றன.
அபிராமியின் மனம் துக்கத்திலே ஒரேயடியாக இடிந்து
போய்விட்டது. முனியாண்டியும் செல்லியும் உறவுக்காரன்
வீட்டுக் கல்யாணம் ஒன்றிற்குப் போக வேண்டியிருந்தத
னால் அபிராமியை வீட்டிலே இரண்டு நாட்கள் தனியாக
விட்டுவிட்டுப் போயிருந்தார்கள். அபிராமிக்குத் துணைக்
காகத் தூரபந்துவான கிழவி ஒருத்தி வந்து தங்கியிருந்
தாள்.

பொழுதுபோக்காக பகவதியும் அபிராமியும் தாயக்
கட்டம் விளையாடிக்கொண்டிருந்தனர். ''இதோ பார்,
உன்னை வெட்டிவிட்டேன்!'' என்று சிரித்துக்கொண்டு
தாயக் கட்டையை உருட்டிய அபிராமி பகவதியின்
முகத்தைக் கவனித்துச் சட்டெனச் சிரிப்பை நிறுத்திக்
கொண்டாள்.

கண்களை அகல விரித்துக்கொண்டு மிரள மிரள
விழித்த பகவதிமீது எல்லைக்காளியின் ஆவேசம் மீண்டும்
எழுந்தருள ஆரம்பித்துவிட்டது.

''அடி அபிராமி, நீ செய்த குத்தம் பொறுக்க
முடியாது. எல்லைக் காளிமேலே நம்பிக்கை இல்லை என்று



சொன்னயே, ஞாபகம் இருக்கா?'' என்று பகவதியின் குரல்
உச்சஸ்தாயியில் அதட்டியது.

அபிராமியின் இருதயம் படபடவென்று பயத்தில்
துடித்தது. ''ஐயோ தாயே! அறியாப் பெண் நான்
சொன்னது தப்பு, தப்பு'' என்று கன்னத்தில் போட்டுக்
கொண்டாள்.

''உம்! அப்படியானால் சரி, உன்னை மன்னிச்சேன்.
சொன்னபடி கேக்கிறியா! கேட்டா நீ இன்னிக்குப்
பிழைச்சே. இல்லாட்டி, நாளை இத்தனை நேரம் கிழிச்சுப்
போட்டுடுவேன்!'' என்று பயங்கரமாகச் சிரித்தது காளி
தேவியின் ஆவேசம்.

''தாயே, கேட்கிறேன்!'' என்றாள் ஹீனஸ்வரத்தில்
அபிராமி.

''ராத்திரி பன்னிரண்டு மணி சுமாருக்கு ஊரடங்கிய
பின்னாலே, நான் பேயுருக் கொண்டு உன் வீட்டுத்
தோட்டக் கதவைத் தட்டுவேன். மூணுவாட்டித் தட்டு
வேன். பைத்தியக்காரப் பெண்ணே, கதவை அசந்து மறந்து
திறந்துவிடாதே. திறந்தாயோ, உன் நெஞ்சிலே அறைஞ்சு
ரத்தம் குடிச்சுடுவேன். திறக்காமல் இருந்தியோ நீ
பிழைச்சே, போ! சொன்னபடி கேக்கிறியா, கேக்கிறியா?''
என்று கூக்குரலிட்ட பகவதி மடால் எனச் சாய்ந்து
மூர்ச்சித்து விழுந்தாள்.

பகவதி வீட்டிற்கு திரும்பிச் சென்று வெகு நேரமாகியும்
அபிராமியின் காதுகளில் அந்தப் பயங்கரக் கூக்குரல்
கேட்டுக்கொண்டேதான் இருந்தது. தன் வாழ்நாட்களின்
முடிவு சமீபத்திலிருப்பதை உணர்ந்த அவளது உள்ளம்
மிக்க பீதியில் ஆழ்ந்துவிட்டது. காளிதேவியின் கோபத்
திற்கு ஏன் இலக்கானோம் என எண்ணிச் சஞ்சலத்தில்
தவித்த அவள் உணவு அருந்தக்கூட மனமின்றிப் பட்டினி
யாகப் படுத்துக்கொண்டாள். என்னதான் முயன்றும்
தூக்கமே வரவில்லை. கூடத்துக் கடிகாரம் டாண் டாண்

என மணி பன்னிரண்டு அடிப்பதைக் கேட்ட அபிராமி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். பயத்தினால் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. உற்றுக் கவனித்த அவளது உடல் முழுவதும் குப்பென்று வேர்த்தது. டக்டக்கென்று தோட்டக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது! 'கனவு இல்லை; நனவுதான்' என்பதை உணர்த்துவதுபோல் கதவு மூன்று முறைகளும் தட்டப்பட்டது. பயத்திலே சில்லிட்டுப் போன அபிராமி பாயின் ஓரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள்.

சில நிமிஷங்கள் சென்றன. தோட்டத்துக் கொட்டிலில் கட்டியிருந்த பசுங் கன்றுகுட்டி திடீரென்று கத்த ஆரம்பித்தது.

''கண்ணுகுட்டி கழுத்திலே தும்பு இருக்குதோ என்னவோ? சித்த எட்டிப்பார்த்துவிட்டு வாயேன்!'' எனக் கிழவி முணுமுணுத்தாள். அபிராமி இடத்தைவிட்டு அசையவில்லை. ஆனால் கன்றுக்குட்டி மிகவும் பயங்கரமாக அலறவே, தைரியத்தை வருவித்துக்கொண்டு எழுந்து நின்றாள். பன்னிரண்டடித்து வெகு நாழிகையாகி விட்டது. காளியாத்தா இத்தனை நேரத்துக்குள் திரும்பிக் கோவிலுக்குப் போயிருக்க வேண்டும் என மனதிற்குள்ளே கண்டுகொண்டு லாந்தரை எடுத்துக்கொண்டு தோட்டக் கதவை அணுகினாள்.

ஓசைப்படாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த அபிராமி கொட்டிலில் கன்றுக்குட்டி ஒருவிதத் தொந்தரவும் இன்றி நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள். சட்டென உள்ளே போகத் திரும்பியவள் தன்னை நோக்கி வந்த ஓர் உருவத்தைக் கண்டு பயத்தில் கிறீச்செனக் கத்தி விட்டாள். அபிராமி மேலே அலறவிடாமல் அவளது வாயைப்பொத்தியது அந்த உருவம். ''என்ன இது! நான் வருகிறேன்னு சொல்லி அனுப்பிவிட்டு வந்தேனே! ஏன்



உனக்கு இவ்வளவு பயம்! கதவைத் திறக்க எத்தனை நேரம்?'' என்று கேட்டான் கனிவான குரலில் சுந்தரமூர்த்தி.

அபிராமியின் படபடப்பு அடங்கப் பல நிமிஷங்கள் சென்றன. ''நீங்க வரதாவது! என்ன புரியவில்லையே!'' என்றாள் மெல்லிய குரலில். திடீரெனக்கணவனை மீண்டும் சந்தித்த சந்தோஷம் தாங்க முடியாது அவளது கால்கள் துவண்டன.

''அந்தச் சின்னப் பயல் வந்து சொல்லவில்லையா?'' என ஆச்சரியத்துடன் கேட்டான் சுந்தரமூர்த்தி.

''பகவதி தம்பியையா சொல்றீங்க? ஒண்ணும் சொல்லவில்லையே! நீங்க சொல்ற விஷயத்தை அவன் வந்து எனக்குச் சொல்லுவான்'' என்றாள் அபிராமி.

''உங்கப்பா ஊரில் இல்லாத சமயம் நான் பன்னிரண்டு மணிக்குக் குதிரை வண்டியுடன் தயாராக வருகிறேன். புறப்பட்டு வந்துவிடு. டவுனிலே நான் ஒரு புது வீடு வாங்கியிருக்கேன். அங்கே ஒரு பழக்கடை வைப்பதாக உத்தேசம். உங்கப்பா கோபம் கொஞ்சம் மாறினதும் பிறகு இரண்டு பேருமா வந்து மன்னிப்புக் கேட்கலாம் என்று சொல்லி அனுப்பினேனே!'' என்றான் வியப்புடன் அவன்.

''பகவதி மேல் இன்னிக்கு வந்த ஆவேசம் கதவைத் திறக்காதேன்னு அல்லவா சொல்லிச்சு?'' என்று ஆச்சரியப்பட்ட அபிராமி அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

''பகவதியின்மேல் வந்தது காளியின் ஆவேசம் இல்லை. பொறாமைப் பிசாசு அல்லவா வந்தது? உன்னைத் தள்ளி வைச்சுட்டு பகவதியை நான் கட்டிக்கொள்ளவில்லையென்று அவள் பெற்றோருக்கு மிகவும் மனக்குறை! அந்தப் பொறாமையில் அவள் உன்னை எப்படி ஏமாற்றி யிருக்கிறாள். ஐயோ! அபிராமி, நீ

இத்தனை முட்டாளா!'' என்று கேட்டான் அன்போடு சுந்தரமூர்த்தி.

# நல்ல காலம்

வீட்டு வாடகை, பால்காரன், மற்றச் செலவுகள் என்று ஒன்றும் விடாது கணக்குச் செய்து கூட்டிப் பார்த்த சீதாவின் இதழ்க்கடையில் லேசாகப் புன்னகை அரும்பியது. மாதம் முடிவடைவதற்கு இரண்டு தினங்கள் இருந்தும் சம்பளத்தில் நாற்பது ரூபாய் அப்படியே மீதமாகி விட்டதைக் கண்டாள். ''குடும்பத்தில் ஏற்படும் அநாவசியச் செலவை அவ்வப்போது தடுத்துச் சிக்கனம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன என்பது இப்பொழுதல்லவா புரிகிறது?'' என்று சொல்லிக்கொண்ட அவள் தனக்குள்ளே கணக்குப் போட ஆரம்பித்தாள். இரண்டு தினங்களுக்குச் செலவிற்காகப் பத்து ரூபாய்களை எடுத்து வைத்து விட்டால் முப்பது ரூபாய் மீதம். எல்லா வருடமும்போல் கிராமத்திலிருக்கும் பாட்டி தன் மாம்பழத் தோட்டத்துக் குத்தகைப் பணத்திலிருந்து பேத்திக்கென்று நூறு ரூபாய் அனுப்புவாள். அந்தப் பணமும் இன்னும் சில தினங்களில் வந்துவிடும். 'பெட்டிக்குள்ளே மூன்று மாத காலமாகக் கிடக்கும் அறுந்த சங்கிலிக்கு இந்தப் பணத்தின் மூலமாகவாவது நல்ல காலம் பிறக்கட்டும்' எனச் சிந்தித்துக்கொண்டிருந்தாள் சீதா.

அன்று ஆபீஸிலிருந்து வரும்பொழுதே கல்யாணராமன் மிகவும் களைப்பாகத் தென்பட்டான். சுடச் சுடக் காபியை தயாரித்து எடுத்துக்கொண்டு வந்தபோதுதான் சீதா வாசற்புறத்து வராந்தாவைக் கவனித்தாள். அங்கே வழக்கமாக நிற்கும் மோட்டார் சைக்கிளைக் காணவில்லை!

''ஆமாம்! சைக்கிள் எங்கே?'' என்று மிகவும் ஆச்சரி